## கே.எம்.சி.ஹெச்., மருத்துவமனையில்

# ‘புரோஸ்டேட்’ புற்றுநோய்க்கு பிரத்யேக நியூக்ளியர் சிகிச்சை!

**கோவை, பிப். 28:** புரோஸ்டேட் புற்றுநோய் மற்றும் அதன் பக்கவிளைவுகளுக்கும் அதி நவீன சிகிச்சை இந்தியாவில் கே.எம்.சி.ஹெச்.,மருத்துவமனையில் நடந்து கொண்டு இருக்கின்றது.

இது குறித்து கே.எம்.சி.ஹெச்., மருத்துவமனையின் நியூக்ளியர் மற்றும் பெட்/சி.டி. ஸ்கேன் (PET/CT) துறையின் மருத்துவ நிபுணர் டாக்டர் கே.கே.கமலேஸ்வரன் கூறியதாவது:

‘புரோஸ்டேட்’ என்பது ஆண்களுக்கு மட்டுமே உள்ள உறுப்பு, இது ஆண் இன பெருக்க பகுதியில் ஒரு சுரப்பியாகும். இந்த சுரப்பியில் வயதானவர்களுக்கு வீக்கம் மற்றும் கட்டி ஏற்பட்டால் வலி, சிறுநீர் கழிப்பதில் சிரமம் இருக்கும். இதில் புற்றுநோயும் வரும்.

எலும்புகளுக்கும் இந்த நோய் பரவும்.இதை ‘பிஎஸ்ஏ’ என்னும் ரத்த பரிசோதனை மூலம் அறியலாம். ‘புரோஸ்டேட் பயாப்ஸி’ மூலம் புற்றுநோயை கண்டறியலாம். இதற்கு ‘புரோஸ்டேட்’ அறுவை சிகிச்சை, ஆண் விதை நீக்குதல், கதிர்வீச்சு மற்றும் ஹீமோதெரபி ஆகிய சிகிச்சைகள் உள்ளன. அத்துடன், ‘நியூக்ளியர் ஸ்கேன்’ மற்றும் சிகிச்சை, ‘புரோஸ்டேட்’ புற்றுநோய்க்கு மற்றுமொரு சிகிச்சை. ‘கேலியம் 68 பிஎஸ்எம்ஏ’ பெட்/சிடி ஸ்கேன், புரோஸ்டேட் புற்றுநோய் எங்கு பரவியுள்ளது என்பதை துல்லியமாக கண்டறியும்.

இந்த ஸ்கேன் மூலம் மருத்துவ சிகிச்சையில் நோய் குணமாகிவிட்டதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.மேலும் ‘புரோஸ்டேட்’ புற்றுநோய்க்கு, ‘லுட்டீசியம் 177 (lutetium), பிஎஸ்எம்ஏ’ மற்றும் ‘ஆக்டீனியம் 225 (Actinium)’ சிகிச்சையும் கே.எம்.சி.ஹெச்.,மருத்துவமனையில் அளிக்கப்படுகிறது.



▶ டாக்டர் கே.கே.கமலேஸ்வரன்

இந்த சிகிச்சையில் பக்க விளைவுகள் மிகவும் குறைவு. இந்த ‘ஆக்டீனியம்’ சிகிச்சை உலகில் பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு வியாதியை முழுதாக குணப்படுத்தி இருக்கிறது. மேலும் எலும்பில் பரவிய ‘புரோஸ்டேட்’ புற்றுநோயினால் வலி இருந்தால், வலியை மட்டும் போக்கும் ‘நியுக்ளியர்’ சிகிச்சையும் உள்ளது. இதை ஒரு முறை செலுத்தினால் எலும்பில் உள்ள வலியை மூன்று மாதங்களுக்கு கட்டுப்படுத்தும். ஆகவே, புரோஸ்டேட் புற்றுநோய்க்கு ஸ்கேன் மற்றும் உலக தரத்திலான அதி நவீன சிகிச்சைகள் இந்தியாவில் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் அமைந்துள்ளது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்கு கே.எம்.சி.ஹெச்–க்கு வரலாம்.

**மேலும் விபரங்களுக்கு, நியூக்ளியர் மற்றும் பெட்/சிடி ஸ்கேன் துறை மருத்துவ நிபுணர் டாக்டர் கே.கே. கமலேஸ்வரன், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை, அவிநாசி ரோடு, கோவை. போன் 0422 4324152/50/54. இமெயில்: drkamaleshwaran@kmchhospitals.com ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.**

–Advt